# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஜுலை 2018

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **செப்டெம்பர் 11, 2018**

வெளியிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) பெறுமதிகளுக்கமைய, 2017 ஆம் ஆண்டின் ஜுலை மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 2018 ஜுலை மாதத்திற்கான உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் 1.1% இனால் அதிகரித்துள்ளதென திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஐ.ஆர். பண்டார தனது உத்தியோகபூர்வ வெளியீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 ஜுலை மற்றும் 2017 ஜுலை மாதங்களில் முறையே 105.9 மற்றும் 104.8 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் அரசினைப் போன்று கைத்தொழில் நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதிக்கமைவாக தரப்பட்ட காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையின் தன்மையினை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மூலம் அடையாளம் காணமுடியும்.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| **மாதம்/ ஆண்டு** | **சுட்டெண் பெறுமதி** |
|---|---|
| ஜுலை - 2017 | 104.8 |
| ஜுலை - 2018 | 105.9 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) 1.1 | |

உற்பத்திக் கைத்தொழில் துறைகளில் 20 தொழில் நிறுவனங்களில் 10 உற்பத்திகளின் உற்பத்தியில் சாதகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது: 2017 ஜுலை மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2018 ஜுலை மாதத்திற்கான "கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்", "கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்", மற்றும் "துணி வகை உற்பத்தி", என்பனவற்றில் முறையே 37.2%, 26.5% மற்றும் 13.7% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது. 2018 ஜுலை மாதத்திற்கான அடிப்படை உலோக உற்பத்திக் கைத்தொழில் மற்றும் உணவு உற்பத்திக் கைத்தொழில் என்பவை முறையே 12.5% மற்றும் 0.1% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

கைத்தொழில் துறையின் உற்பத்தியின் அளவு மொத்தம் 10 கைத்தொழில்களில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது: "மின் உபகரண உற்பத்திகள்", "கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்" மற்றும் "மரத் தளபாடங்கள் உற்பத்தி" என்பன 2017 ஜுலை மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் முறையே 26.9%, 24.4% மற்றும் 19.1% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2018 ஆண்டின் ஜுலை மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.